


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற “நான் முதல்வன்” மூன்றாண்டு வெற்றி விழா நிகழ்ச்சியில், “வெற்றி நிச்சயம்” திட்டத்தினை தொடங்கி வைத்து, “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் ThirdWave Corporation நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்ற மு.கார்த்தி என்ற மாணவருக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ் குமார், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற ”நான் முதல்வன் மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் ”வெற்றி நிச்சயம் திட்ட தொடக்க விழாவில், மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள், கண்டறிதல்கள் மற்றும் புதிய தொழில்நுட்ப உருவாக்கங்களைப் பிரதிபலிக்கும் ”நான் முதல்வன் நிரல் திருவிழா கண்காட்சியினை பார்வையிட்டார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று (1.7.2025) நடைபெற்ற “நான் முதல்வன்” மூன்றாண்டு வெற்றி விழா மற்றும் “வெற்றி நிச்சயம்” திட்ட தொடக்க விழாவில், “நான் முதல்வன்” கல்லூரி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற “நான் முதல்வன்” மூன்றாண்டு வெற்றி விழா நிகழ்ச்சியில், “வெற்றி நிச்சயம்” திட்டத்தினை தொடங்கி வைத்து, “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் TEXAS INSTRUMENTS நிறுவனத்தில் வேலைவாய்ப்பு பெற்ற வினீத் என்ற மாணவருக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உயர்கல்வித் துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு யூனிட் தலைவர் உன்னி கிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, சோழிங்கநல்லூர் வட்டத்திற்குட்பட்ட ஒக்கியம் மடுவில், நேற்று முன்தினம் (30.06.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் ரூபாய் 338 கோடி மதிப்பீட்டில் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்களில் தீவிர வெள்ள தணிப்பிற்கான ஒருங்கிணைந்த 12 வெள்ள மேலாண்மை பணிகள் திட்டத்தினை துவக்கி வைத்து, இத்திட்டத்தின் கீழ் ஒக்கியம் மடுவினை ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மறுசீரமைப்பு மற்றும் புத்தாக்கம் செய்யும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், நீர்வளத் துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்.

### முன்னாள் குடியரசு துணைத் தலைவர்

# எம்.வெங்கைய நாயுடு பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை, 2 - முன்னாள் குடியரசு துணைத் தலைவர் எம். வெங்கைய நாயுடு அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது சமூக வலை தளப் பதிவில்,

நீங்கள் நல்ல உடல் நலத்துடனும், மகிழ்ச்சியாகவும் தொடர் செல்வாக்குடனும் திகழ வாழ்த்துகிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

### சென்னை புறநகர் பகுதிகளில்

# வெள்ளப் பாதிப்பைக் குறைப்பதற்கான மறு சீரமைப்பு பணி!

## அமைச்சர் துரைமுருகன் துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 2 - 2025-26ஆம் ஆண்டிற்கான நீர்வளத்துறையின் நிதிநிலை அறிக்கையின் பொழுது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களால் சென்னை மற்றும் அதன் புற மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தீவிர வெள்ள தணிப்புக்கான ஒருங்கிணைந்த 12 வெள்ள மேலாண்மை பணிகள் ரூபாய் 338 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

இவ்வறிப்பினைத் தொடர்ந்து, மடுவினை மறுசீரமைத்து புத்தாக்கம் செய்யும் பணி, மூடிய கான்கிரீட் வடிகால்வாய்கள் அமைக்கும் பணி, நீர்த்தேக்கம் உருவாக்கும் பணி இது தவிர வெள்ளத் தடுப்புச் சுவர் மற்றும் உள்வாங்கி அமைக்கம் பணி, கரையினை மறு சீரமைத்து பலப்படுத்தும் பணி. அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதிகளில் வெள்ள பாதிப்பை குறைப்பதற்கான ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மை தீர்வு பணி மற்றும் வெள்ளப்போக்கி கால்வாய் அமைக்கும் பணிகளை ரூ.338 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான அரசாணை பெறப்பட்டு, முதற்கட்ட ஒப்பந்த பணிகள் இறுதி செய்யப்பட்டு வருகிறது.

இதில் முதற்கட்டமாக நேற்று முன்தினம் (30.6.2025) நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் ஒப்பந்த பணிகள் இறுதி செய்யப்பட்ட ரூ.27.00 கோடி மதிப்பீட்டிலான தென் சென்னை புறநகர் பகுதிகளின் வெள்ள பாதிப்பை குறைப்பதற்கான தீவிர வெள்ள தணிப்புக்கான ஒருங்கிணைந்த மறு சீரமைப்பு மற்றும் புத்தாக்கம் செய்யும் பணியினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ், நீர்வளத்துறை அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ரமேஷ் மற்றும் நீர்வளத் துறையின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கரூர் மாவட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும்

# கழக உறுப்பினர் சேர்க்கும் முன்னெடுப்பு - மாபெரும் பிரச்சார பொதுக்கூட்டம்

## மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி அறிக்கை!

கரூர், ஜூலை 2-

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு எனும் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் முன்னெடுப்பு பிரச்சார பொதுக்கூட்டம் 2ம் தேதி (இன்று) புதன்கிழமை மாலை 6 மணி அளவில் கரூர் உழவர் சந்தை அருகில் நடைபெறுகிறது. தலைமைக் கழக பேச்சாளர் ஆரூர் மணிவண்ணன் சிறப்புரையாற்றுகிறார்.



அது சமயம் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு வி. செந்தில் பாலாஜி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி எஸ்.ஆர்.எம். திருமண மண்டபத்தில் நடைபெற்ற சி.பிரகாஷ் லதா இல்லத் திருமண விழாவில் உயர் கல்வி துறை அமைச்சர் கோ.வி.செழியன், மாவட்டச் செயலாளர்கள் காடுவெட்டி ந.தியாகராஜன் எம்.எல்.ஏ., நிவேதா முருகன் எம்.எல்.ஏ., கே.வைரமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், ஸ்டாலின்குமார், இ.பரந்தாமன், சேர்மன் துரைராஜ் மற்றும் ஒன்றிய, நகரச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்கள் ஆர்.மணிபாரதி – பி.வர்ஷா ஆகியோரை வாழ்த்தினர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் தாயனூர் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழாவைமுன்னிட்டு நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு 1000 நபர்களுக்கு ரூபாய் 5 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், ஊராட்சி மன்ற தலைவர் லாவண்யா ராஜேஷ் குமார் உள்ளனர்.